# காந்தீயம்

ගාන්ධීයම

Gandheeyam


அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

Regd No.S.159 Of 25.08.1965

மலர் - 33 இதழ் 06 ஒக்டோபர் - நவம்பர் - 2021 விலை ரூபா 20/=


## காந்தியடிகளின் பெண் உரிமை, பால் சமத்துவம் பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும்



152 ஆவது அகவையில் காந்தி

காந்தியடிகளின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அகிம்சை வழியில் இந்திய சுதந்திரத்தைப் போராடிப் பெறுவதும் ஒற்றுமையான அமைதியான இந்தியாவை காண்பதும், அதே சமயம் இந்திய மக்களின் வறுமையை நீக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி தன்னிறை பொருளாதாரத்தை அடைதலுமாக விருந்தது. இதற்காக 18 நிர்மாண திட்டங்களை வகுத்தார். அவற்றினுள் பெண்ணுரிமையும் ஒன்றாகும்.

பெண்கள் ஒடுக்கப்பட்டு முடக்கப்பட்டு வீட்டினுள் இருப்பதையும் அதனால் அவர்களின் சுதந்திரம், முன்னேற்றம், கல்வி, பொருளாதாரம் ஆகியன பாதிப்படைந்து உள்ளமையையும் கண்டு அவர்களை மீட்டெடுத்து சகல துறைகளிலும் ஆண்களுக்கு சமமாக் ஈடுபடுத்த வேண்டும் என உறுதி பூண்டார்.

"தருமம் செய்தல் வீட்டில் ஆரம்பிக்கப்பட வேண்டும்" என்ற முதுமொழிக்கமைவாக முதலில் தனது மனைவி கஸ்தூரிபாய் எவ்வாறு இருக்க வேண்டும் என சிந்தித்தார். ஆரம்பத்தில் கஸ்தூரிபாய் தனக்கு அடிமைப்பட்டு செயற்பட வேண்டும் என எண்ணினார். ஆனால் காலம் செல்ல குடும்ப வாழ்க்கையில் அத்தவறை உணர்ந்தார். கஸ்தூரி பாயை தனது மனைவியாக மட்டும் நோக்காது சகோதரியாகவும், தோழியாகவும், தாயாகவும் குருவாகவும் ஏற்றுக் கொண்டார்.

பண்டைக்காலம் முதல் பெண்கள் அடிமைப்பட்டிருந்ததை கதைகள், புராணகதைகள் போன்றவற்றினூடாக அறிய முடிந்தது. இவற்றை வன்மையாக எதிர்த்தார். அகிம்சையுடன் கூடிய நாகரீகம் உதயமாவதற்கும் தொடர்ந்து அவை வளர்ச்சி பெறுவதற்கும் பெண்கள் பெரும் பங்காற்றுவார்கள் என எண்ணினார். பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் செய்யும் இயல்புள்ளவர்களாதலால் பெண்கள் விடுதலையானது நாட்டின் சுதந்திரம், வளர்ச்சி என்பவற்றிற்கு பெரிதும் உதவும் என எண்ணினார். காந்தியடிகளின் எண்ணம் வீண்போகவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் பெண்களை ஈடுபடும்படி வேண்டுகோள் விடுத்தார். பெண்களும் துணிச்சலுடன் பங்குபற்றினர். கஸ்தூரிபாய், கமலாநேரு, சுசீலா நாயர், சரோஜினி நாயுடு, சட்டோபாத்பாயா, அம்மரித் கௌர், சுசேதா கிருபாளினி போன்ற நீண்ட பெயர்பட்டியலை எழுதமுடியும். தேவையான சந்தர்ப்பங்களில் காந்தி தலைமை தாங்கினார். சீதை போன்ற தூய்மையும் உறுதியும் தன்னடக்கமும் உள்ள பெண்களை உருவாக்க வேண்டும் என்பதும் காந்தியடிகளின் சிந்தனையாகவிருந்தது.

மேலும் பெண்களைப் பற்றிக் கூறும்போது அவர்களால் தங்களை தற்காத்துக் கொள்ள முடியும். அவர்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் யந்திரம் மட்டுமல்ல. அவர்கள் அறிவு பூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் வாழக்கூடியவர்கள் அவர்களுக்கு வேண்டிய நீதியான, பொருத்தமான முன்னேற்றகரமான வாய்ப்புக்களை கிடைக்கச் செய்ய வேண்டும். பெண்கள் நல்மனப்பாங்கிலும் ஆன்மீக நிலையிலும் ஆண்களை விட உயர்ந்தவர்கள் என்றார்.

பெண்களால் தமது திறமைகளை வெளிக் கொண்டு வந்து சமூகத்தின் பொது நலனுக்கு அவர்களால் உழைக்கமுடியும் என்பது அவரதுதிடமான நம்பிக்கையாகவிருந்தது. உப்புச் சத்தியாக்கிரக போராட்டத்தில் 30,000 பேர் பங்குபற்றிய போது 14000 பேர் பெண்களாவர். பழமை வாதி பெண்கள் கூட ஆயிரக்கணக்காக வீதியில் இறங்கினர்.

பிள்ளைகள் வாழ்க்கைக் காலத்தில் பெற்றாரில் தங்கியிராது தாங்களே செயற்பட்டு வாழபயிற்றுவிக்கப்பட வேண்டும். வீட்டு வேலைகளில் அரைவாசி ஆண்களுக்கும் பகிரப்பட வேண்டும். பெண்கள் ஏதாவது ஒரு தொழில்சார் பயிற்சியைப் பெற்று தமது வாழ்க்கையை மேம்படுத்தவேண்டும்.

ஆண்களின் அடிமைகள் என முன்பு கற்பிக்கப்பட்டது. அரசியலில் பெண்களின் பங்கை அதிகமாக எதிர்பார்த்து அவர்களை பயிற்றுவிக்கும் போது அவர் நினைத்தவாறு அதிகமானோர் ஈடுபட்டனர். பல நூற்றாண்டுகளாக அடக்கப்பட்டிருந்த பெண்கள் தற்போழுது அடக்கு முறைகளை தகர்த்து அவர்கள் உயர்வடையும் காலம் வந்துவிட்டது என்றார். பெண்கள் கல்வியில் சமத்துவம் அடைவதற்கு அவர்களின் அரசியல் உரிமைகள் செல்வாக்கு செலுத்தியது. அதுமட்டுமல்லாமல் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவியது.

மேலும் பால்ய விவாகத்தை கண்டித்தார். அது மிகவும் தவறானது என்றார். விதவை திருமணத்திற்கு எதிரான சமய, சமுதாய தடைகளை அகற்றி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்றும் வரதட்சணை (சீதனம்) முறை முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்றும் கூறினார். ஆச்சாரிய கிருபாலினி அவர்கள் காந்தியடிகளின் பெண் உரிமை செயற்பாடு பற்றிக் கூறும்போது **"தற்காலத்தில் பெண்கள் மேம்பாட்டிற்காக காந்தியடிகள் செயல்பட்ட அளவிற்கு யாரும் செயல் புரியவில்லை எனலாம். அகிம்சை சார்ந்த விடுதலைப் போராட்டத்தில் பெண்களது ஈடுபாடு சாதனை அளப்பரியது. இது பெண்களை அவர்களது கடமைகளை செய்வதற்கு உரிமையுடையவர் களாக்கிவிட்டது. விடுதலைக்குப் பின் இந்தியாவில் அவர்களுக்கு ஆண்களுக்கு நிகரான சமத்துவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய நாடுகளில் இந்திய பெண்களது வெள்ளைக்காரச் சகோதரிகள் அவர்களது உரிமைகளுக்காகப் போராடுவது போலத் தனித்துப் போராட வேண்டிய அவசியத்தை தவிர்த்துவிட்டது"** என்றார்.

மன்னிப்பு அர்ப்பணிப்பு மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றும் பழமையான கொள்கைகளில் நீந்திச் சென்றாலும் அதில் அமிழ்ந்து விடக்கூடாது என்றும் அப்படியாயின் அது தற்கொலைக்குச்சமம் என்றார்.

இன்று பெண்கள் சம உரிமைகளை பெற்றுள்ளமை காரணமாக பெண்கள் சகல செயற்பாடுகளிலும் ஈடுபட்டு நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார உயர்வுக்கு பெரும் பங்காற்றி வரும் போது காந்தியடிகள் கண்ட கனவு நிறைவேறி வருகின்றமையைக் காண முடிகிறது.

நாட்டின் விடுதலைக்காக பலபுரட்சிகரமான சிந்தனைகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி தன்னை நாட்டிற்காக அர்ப்பணித்த காந்தியடிகளை இரவீந்திர நாத் தாகூர் அவர்கள் காந்தியடிகள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது "மகாத்மா" என்றும் மறைந்த பின் தேசத்தின் தியாகி" (Marty of the Nation) என்றும் கௌரவமாக அழைத்தார்.

**க.செல்வக்குமாரன் M.A**
**ஓய்வுநிலை அதிபர்**

**கட்மையைச் சரிவரச் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மூன்றாம் சக்தி" பதிப்புரை

**மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணை**

மூன்றாம் சக்தி அது "அன்பு கனிந்த கனிவு" உள்ளத்து ஒளிரும் ஞானச்சுடர். உயர்வின் உய்வின் ஊற்றுக்கண், இன்ப ஊற்று, முக்திக்கு வித்து ஆதிமூலம்.

உலகில் துன்பம் சூழ்கின்ற போழ்தெல்லாம் அதனைப் போக்கி, இன்பம் முகிழ்விக்க அன்பு அறவழியை அகிம்சையை கடைப்பிடித்து வாழ வழிகாட்டியுள்ளனர் சான்றோர்கள். இன்று நம் நாட்டிலும், உலகிலும் பற்றிப் படர்ந்துள்ள துன்பவிருளைப் போக்க, புனிதர் வினோபா காந்திய ஒளியில் வழிகாட்டியுள்ளார்.

மனிதன் தன் வாழ்வில் வளம் கொழிக்க, அதற்குகந்த அரசியல், பொருளாதார, சமூக வாழ்வைக் கட்டமைத்துக் கொள்கிறான். ஆயினும் அத்தகைய கட்டமைப்பு காலத்திற்கேற்ற மாற்றத்திற்கு உட்பட்டது. "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலமரபினானே" என்பது ஏற்புடைய கோட்பாடு ஆயினும் அம்மாற்றத்தை ஏற்படுத்தும் வழிதுறை ஏதுவாகவிருக்க வேண்டும்?

உலகில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட சில சமயம் வன்முறைச் சக்தி உதவியுள்ளது." ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்று போற்றப் பெற்ற இரஷ்யப் புரட்சி, பிரஞ்சுப் புரட்சி நிலைத்ததா? நீட நின்றதா? இல்லை! அடுத்து, சட்டத்தின் மூலம் மாற்றம் கொண்டு வரும் முயற்சி பல நாடுகளில் மேற்கொள்ளப் பெற்றன. சட்டம் அனைவரின் முன்பும் சமமாகவிருக்கிறது. ஆயினும் மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமாக இல்லை. பின் என்னதான் வழி?

காந்தியடிகள் தமது வாழ்வியல் சோதனைகள் மூலம் நிலைத்த மாற்றத்திற்கேற்ற நேரிய, சீரிய வழியைக் காட்டிச் சென்றார். காந்திய ஒளியில் இயங்கிய வினோபா, காந்தியத்தின் புதிய பரிமாணத்தை கண்டுணர்ந்தார். அவர் கூறுகிறார். "மூன்று சக்திகள் உள்ளன. வன்முறைச் சக்தி முதலாவது, சட்டத்தின் சக்தி இரண்டாவது, நாம் உணர்த்தும் சக்தி முன்னதும் அல்ல. பின்னதும் அல்ல. மாண்புடைய மனிதனின் உணர்வுருவாக, இயல்பாக அமைந்துள்ள சக்தி" அதுவே மூன்றாம் சக்தி.

ஆச்சாரியார் வினோபாவே அவர்களின் "மூன்றாம் சக்தி" நூல் பற்றிய பார்வை இங்கே தரப்படுகிறது."மூன்றாம் சக்தி" மூல நூலை தமிழாக்கம் செய்தவர் ச. மேலப்பட்டி, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மா. பாதமுத்து அவர்கள் அதிலுள்ள முக்கியமான கருத்துகளைத் தொகுத்து வெளியீடு செய்திருப்பவர் பிரானூர், செங்கோட்டை மகாத்மா காந்தி சேவை மையத்தை சேர்ந்த வி.விவேகானந்தன் அவர்கள். **(ஆ-ர்)**

இந்த மூன்றாம் சக்தி மனிதனின் மனக்குகையில் மலரடிக் கிடக்கிறது. மண்டிக்கிடக்கும் சக்தியைத் தூண்டிச் சுடர்விடச் செய்வது எப்படி? இச்சக்தியின் ஆற்றலை, நிலைத்த தன்மையை, பல்வேறு அரங்குகளில், பல்வேறு காலக் கட்டங்களில் உரைக் கோவை மூலம் விளக்கப் பெற்றுள்ளது இந்நூலில்.

மூன்றாம் சக்தி என்பது தான் என்ன? என்று வினா எழுப்பி, அதற்குரிய தெளிவுரையை, நம் நாட்டின் முழுமைப் புரட்சிக்கு வித்திட்ட லோக்நாயக் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் மதிப்புரையினைப் பதிப்பித்து இந்த அரிய நூலை நாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். நூலில் அமைந்து துவங்கும் கொள்கையினையும், கோட்பாடுகளையும் தெளிவுபடுத்த வேறு உரை வேண்டுமா?

வினோபா அடிகளின் இந்த அரிய உரைக் கோவையை, திருவாளர்கள் மார்ஜோரி சைக்ஸ், கே.எஸ். ஆச்சார்லூ ஆகியோர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளனர். திரு.மா.பாதமுத்து அவர்களால் தமிழாக்கம் செய்யப் பெற்றுள்ள தமிழ் வடிவை, இன்று, மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணை, வண்ண மலராக வெளியிடுகிறது.

உண்ணா நோன்பு பாதயாத்திரை, சத்தியக் கிரகம் போன்ற காந்திய நெறிமுறைகள் இன்று கொச்சைப்படுத்தப் பெறுகின்ற வேதனைக் காட்சிகள், போராட்டக்களங்கள் அமைத்து அதில் காந்தியடிகளின் திருஉருவை முன்னணியில் அல்லது பின்னணியில் வைத்து போலி விளம்பரம் மலிவடைந்துள்ளது. இந்நிலையில், சமுதாய மாற்றம் காண களப்பணியாற்ற முற்படும் ஊழியர் எந்த சக்தியை ஆதார சக்தியாக - ஊன்று கோலாக ஏற்க வேண்டுமென்பதை விளக்கும் கை விளக்கு இந்நூல். கை விளக்கின் பின் சென்று வாழ்வியல் நெறிகளைக் கடைப்பிடித்து, நாட்டில் முழுமைப் புரட்சி முற்றுப் பெற முற்படுவோம்.

**"அன்பின் வழியது உயர்நிலை"**

# காந்தி அண்ணலின் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அடங்கிய நூல்: "கிராமசுயராஜ்யம்"

**காந்திய இலக்கியச் சங்கம்**

இன்றும் நமது தாய்த்திருநாடு கிராம இந்தியாவாகத் தான் இருக்கின்றது. "இந்தியா கிராமங்களில் வாழ்கின்றது" என்ற காந்தியடிகளின் கருத்து இன்றைக்கும் நூற்றுக்கு நூறு உண்மையாக இருப்பதைக் காண்கின்றோம். நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றி பல்வேறு வகையான கொள்கைகளும் கருத்துக்களும் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வளர்ச்சி பெற்ற நாடுகளின் சூழ் நிலைக்கேற்ப உருவாக்கப் பெற்றவை. நமது நாட்டின் சூழ்நிலைக்கு அவை எந்த அளவிற்கு ஒத்து வரும் என்பது கேள்விக்குரியதாகும்.

நமது நாட்டில் ஏறத்தாழ எழுபது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்தியக் கிராமங்களின் பின்புலமும், இயல்புகளும் தனிவகையானவை. இங்குள்ள சிக்கல்களும், செயல்படும் சக்திகளும் வேறு வகையானவை. இங்கு மேலை நாட்டு வளர்ச்சி முறைகளைப் பின்பற்றினால் எதிர்பார்க்கும் விளைவுகள் ஏற்படாது. காந்தியடிகள், எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்பினார். அந்த சமுதாயம் எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி தெளிவான, தீர்க்கமான கருத்துக்களைக் கொண்டிருந்தார். தனது இலட்சிய சமுதாயத்தை முதலில் நமது நாட்டில் உருவாக்கக் கருதினார். அண்ணலின் நிர்மானத் திட்டங்கள் இந்த நோக்கில் உருவானவையே.

இந்தியாவில் அமைகின்ற ஒப்பிலாத சமுதாயத்தின் அடிப்படையாக கிராமங்கள் இருப்பதை உணர்ந்த காந்தியடிகள், கிராம வளர்ச்சியைப் பற்றி தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்தார். அவரது கருத்துக்கள் எல்லாம் அவரது நடைமுறை அனுபவத்தைச் சார்ந்து உருவானவை. அவரைப் போன்று சமுதாய வளர்ச்சிக் கருத்துக்களில் சோதனைகள் செய்து சாதனைகள் புரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்று கருதலாம்.

நமது நாட்டில் விடுதலைக்குப் பிறகு விரைந்து முன்னேற்றம் காண சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் (Community Development Programme) செயல்படுத்திய பொழுது வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழிகாட்ட நூல்கள் தேவைப் பெற்றன. அப்பொழுது காலத்தேவையை நிறைவேற்றும் வகையில் காந்திய அறிஞர் எச்.எம். வியாஸ் முயன்று, அண்ணலின் கருத்துக்களை முறைப்படுத்தி தொகுத்து. "கிராம சுயராஜ்யம்" என்ற நூலாக வெளியிட்டார். பொதுவாக கிராம வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர்களும், குறிப்பாக கிராம வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகின்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களின் சுரங்கமாக இந்நூல் திகழ்கின்றது. தமிழக அரசின் ஊழியர்களின் தேர்வுக்குரிய நூலாகவும் இது அமைந்திருக்கின்றது.

காந்தியத் தொகுதிகளில் ஒன்றாக முன்பு வெளிவந்த நூல் இப்பொழுது தனி நூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றது.இந்நூலின் உள்ளடக்க கருத்துக்கள் எல்லாம் நமது கல்வியில் இடம் பெற வேண்டியவை. குறைந்த அளவில் பட்ட வகுப்பு மாணவர்களாவது இவற்றைத் தெரிந்திருந்தால் அவர்களது வாழ்க்கை நோக்கில் வரவேற்கத்தக்க மாறுதல் ஏற்படலாம். நமது நாட்டுக் கல்வியாளர்கள் இதனைப் பற்றி எண்ணிப்பார்க்கலாம். பல நூல்களை ஒரு முறை படித்தால் போதும். சில நூல்களை மறுபடியும், மறுபடியும் படிக்க வேண்டும். அப்படிப்பட்ட நூல்களில் ஒன்றுதான் இந்நூல். எல்லா வகையான மக்களும் படிக்க வேண்டிய நூல் என்பதால் அதற்கேற்ற முறையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றோம்.

**எல்லா நூலகங்களிலும் இருக்க வேண்டியது இந்நூல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி ஆண்டு 152, ஒக்டோபர் - நவம்பர் 2021




**பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் சிரமங்கள் எனும் மலையை வென்றுவிடலாம்.**

-மகாத்மா காந்தி-

## விவசாய பொருளாதாரத்திற்கு உயிர்ப்பூட்டுவோம்

"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றேன்" என்ற காந்தியின் கருத்து வறுமையிலிருந்து தனது தாய் நாட்டு மக்களை விடுவிக்கவேண்டும் என்ற கூரியநோக்குடையது. இந்தியாவின் வறுமைக்கு அறியாமையும், அந்நிய ஆதிக்கமுமே காரணமென காந்தி உணர்ந்திருந்தமையால் பிரித்தானியர் ஏற்படுத்திய காலனித்துவ கல்விமுறை மனித சிந்தனையை ஆங்கில ஏகாதிபத்தியத்திடம் அடமானம் வைத்திருப்பதை அறிந்திருந்தார். இந்தியர்களை அடிமைகளாக தென்னாபிரிக்கா, மொரீஸஸ், பீஜி, இலங்கை போன்ற நாடுகளுக்கு கொண்டு சென்று அங்கும் அவர்களது அடிமை வாழ்வை நிரந்தமாக்கிய இழிநிலையை நேரடியாக தென்னாபிரிக்காவில் கண்டார். டால்ஸ்டாய் என்னும் ரஷ்ய சிந்தனையாளரிடம் கல்வி, சமய, சமரச அடிப்படையிலான விவசாய பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட கருத்துகளைக் கண்டார். அது காந்தியை மிகவும் கவர்ந்தது.

இதன் விளைவு தென்னாபிரிக்காவில் டால்ஸ்டாய் பெயரில் பீனிக்ஸ் பண்ணை ஒன்றை நிறுவினார். தனது கல்வி பற்றிய சிந்தனைகளின் பரீட்சார்த்த நிலையமாக அதனைக் கையாண்டார். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் விவசாய பொருளாதார நாடுகளுக்கு காந்தியின் வாழ்க்கைமைய கல்வி இன்று பொருத்தமாக அமைவதைக் காணலாம்.

இன்றைய காலகட்டத்தில் கொரோனா என்ற கொடிய ஆட் கொல்லி நோய் உலகில் பல உயிர்களைக்காவு கொண்டிருக்கும் இவ்வேளையில் பொதுமுடக்கம், நடமாட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி நிலையை அடைந்து கொண்டிருக்கிறது.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட் களைப் பெறுவதில் மக்கம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். இவ்வேளையில் சுயபொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு கின்ற திட்டங்கள் தேவை. மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை தாமே உற்பத்தி செய்து கொள்கின்ற நிலை வரும்போது அரசாங்கத்தில் தங்கியிருக்கின்ற நிலை ஏற்படாது. மக்கள் வீட்டுத் தோட்டங்களில் கவனம் செலுத்தினால் நஞ்சற்ற காய்கறிகளைப் பெறுவதுடன் மேலதிகமானவற்றை விற்று சிறு வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம். எனவே காந்தி காட்டிய வழியில் விவசாயம் சிறு கைத்தொழில்கள் மூலம் தன்னிறைவு சமுதாயத்தை நோக்கிப் பயணிப்போமாக.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.

## சர்வோதயத்தின் ஸ்வரூபம்

இதுவரை ஆக்கப்பட்டுள்ள சமுதாயம் நிறை வாக ஆக்கப்படவில்லை. குடும்ப உணர்ச்சி உண்மையாக நிலைத்துள்ளது. ஆயின் சமுதாயம் என்று சொல்லப்படுவது இன்னும் நிறுவப்படவில்லை. இந்தியாவில் சாதிகள் அமைந்துள்ளன. சமுதாயம் அமையவில்லை. ஒரு கிராமத்தில் இருபது சாதிகள் இருக்கின்றன. கிராமம் முழுதுமாய் சமுதாயம் இன்னும் உருவாகவில்லை. சாதிகள் ஒன்றை எதிர்க்கின்றன. ஒன்று குடும்ப உணர்ச்சியை விரித்துகிராம மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தவரென்ற உணர்ச்சி உண்டாக்கப்பட வேண்டும். சர்வோதயக் கொள்கையை ஏற்கின்றவர்கள் அனைவரும் அத்தகைய கிராம சமுதாயத்தை நிறுவ ஒன்றுபட வேண்டும்.

சாதிகளைப் பற்றி அடிப்படைதத்துவங்கள் ஒன்றும் இல்லை. பிராமண சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் அதில் பரமலோபிகளும் உள்ளார்கள். உதாரகுணமுடையவர் களும் நல்வர்களும் உள்ளார்கள். ஒற்றுமையற்ற இத்தகைய சமுதாயத்தால் பயன் என்ன? ஆகையால் சாதிகள் அகன்று கிராம சமுதாய உணர்ச்சி பரவ வேண்டுவது அவசிய மாகின்றது. இது சர்வோதயத்தின் ஒரு அடிப்படைச் சிந்தனை.


(1971 மார்ச் காந்தியத்திலிருந்து) -ஆதாரம் கிராமோதயம்-

## நிகழ்நிலைக் கருத்தரங்கு

மகாத்மா காந்தியடிகளின் 152 வது ஜெயந்தி தினத்தையும் சர்வதேச அகிம்சை தினத்தையும் முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறையும் இணைந்து நடத்துகின்ற Zoom செயலி ஊடான நிகழ்நிலைக் கருத்தரங்கு இன்று (02.10.2021) மாலை 7.00 மணிக்கு காந்தி சேவா சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ந. சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ் இந்திய துணைத்தூதுவர் கௌரவ ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் மற்றும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சி. ஸ்ரீசற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரபல சமய சமூகப் பெரியார் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் "மகாத்மா காந்தியடிகளின் யாழ்ப்பாண விஜயமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்ற இருக்கின்றார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற இருக்கின்றது.



## மகாத்மா காந்தியின் திருவுருவச்சிலை திறப்பு

இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி அடிகளின் உருவச்சிலை கிளிநொச்சி, உருத்திரபுரம் 8ம் வாய்க்காலில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் 2021 அக்டோபர் 02 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. அகில இலங்கை காந்தி சேவா சங்க உபதலைவரும் காந்தி நிலையத் தலைவருமான கி.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கத்தின் தலைவரும் இலங்கையின் மிக மூத்த காந்தியவாதியுமான சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.சிவகரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக சங்கத்தின் பொதுச் செயலாளர் செ. சுப்பிரமணியம், "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியரும் முன்னாள் பொதுச் செயலாளருமான எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிலை திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து கனனி அறைத் திறப்பு விழாவும் 152 ஆவது காந்தி ஜெயந்தி விழாவும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் யாவும் கொவிட்-19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடைபெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சுதந்திரத்துக்கு வழிவகுத்த இந்திய சுதந்திர வேட்கை

*சோழர் காலம் முதல்....*

இந்த சுதந்திரம் சாதாரணமாக பெறப்பட்டது அல்ல. மொத்த உலகையும் தனது கைகளில் வைத்திருந்த வல்லமை கொண்ட ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலையை பெற எண்ணிலடங்கா பல தியாகங்கள் செய்யப்பட்டன. இந்திய சுதந்திர போராட்டம் என்பது இந்தியாவுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. இலங்கையோடும் தொடர்பு உள்ளது. ஏனெனில் இந்திய சுதந்திரமே. இலங்கை சுதந்திரத்துக்கு வழிவகுத்தது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான உறவு என்பது வரலாற்றுக்கு முந்தையகால தொடர்பை உடையது. ஒரு காலத்தில் சோழர்களின் கட்டுப்பாட்டில் இலங்கை இருந்தது என்பதை நாம் அறிவோம். ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இந்திய விடுதலைக்காக பாடுபட்ட மகாத்மா காந்தி இலங்கையுடன் ஆழமான உறவைக் கொண்டிருந்தார்.

*சுதந்திர தாகம்*

இந்திய துணை கண்டத்தில் நடைபெற்ற ஒவ்வொரு மாற்றமும் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் ஏற்பட்ட சுதந்திர தாகம் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்களிடையே சுதந்திர வேட்கையை ஏற்படுத்தியது.

இதன் விளைவாக 1920களில் இளைஞர் காங்கிரஸ் ஹண்டி பேரின்நாயகம் தலைமையில் ஆரம்பமானது. இவருடன் சுப்பிரமணியம், செனட்டர்கள் பி.நாகலிங்கம், கனகநாயகம், சுப்பையா மற்றும் பாலசுந்தரம், பேராசிரியர் சுந்தரலிங்கம், நேசையா, நடேசபிள்ளை உள்ளிட்டோர் இணைந்து செயல்பட்டனர்.

*முற்போக்கு கொள்கை*

1924ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்தான் காந்தியை இலங்கைக்கு அழைத்த முதலாவது அமைப்பாகும். பின்னாளில் இது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என பெயர் மாற்றம் பெற்றது.

முழு இலங்கைக்குமான முழுமையானவிடுதலை வேண்டும் என்ற கருத்தை முதல் முறையாக அமைப்பு ரீதியில் முன்வைத்து அதற்கான நேரடி போராட்டத்தில் ஈடுபட்ட பெருமை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசையே சாரும். ஆங்கிலேயரின் அதிகாரத்தை அகற்றுதல், முழுமையான சுயாட்சி பெறுதல், தேசிய ஒற்றுமை, மது விலக்கு, தீண்டாமை ஒழித்தல் போன்ற பல முற்போக்கு கொள்கைகளை இவர்கள் முன் வைத்தனர்.

*காந்திக்கு வரவேற்பு*

1927ம் ஆண்டு இந்த அமைப்பின் மாநாட்டில் மகாத்மா காந்தி கலந்து கொண்டு சிறப்பித்தார். இதற்காக 1927ம் ஆண்டு நவம்பர் 12ந் தேதி கப்பலில் இலங்கை துறைமுகத்தை வந்தடைந்தார். உலகின் நன்மதிப்பை வென்ற காந்தி எனும் ஆளுமையை காண மக்கள் திரண்டிருந்தனர். மிகுந்த மரியாதையோடு காந்தி வரவேற்கப்பட்டார். காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி, ராஜ கோபாலச்சாரி, மஹாதேவ் தேசாய், பியரெலால் நாயர், லட்சுமி ராஜகோபாலச்சாரி, ஜம்னதாஸ் காந்தி ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

யாழ்ப்பாண மக்கள் இன, மத வேறுபாடு இன்றி ஒத்துழைத்து மகாத்மா காந்தியை வரவேற்றனர். காந்தியடிகள் யாழ்ப்பாணம் வந்த போது அவரை கவுரவிக்கும் முகமாக மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. காந்தி சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டன.

*17 நாட்கள்*

மகாத்மா காந்தியின் எண்ண கருத்துகளால் கவரப்பட்ட இளைஞர் காங்கிரஸ் இயக்கத்தினர் பலர் வெளிநாட்டு பொருட்களை துறந்து கதர் ஆடைகள், தேசிய உடையை அணிந்தனர். நவம்பர் 12ந் தேதியில் இருந்து 29ந் தேதி 17 வரை நாட்கள் அவர் இலங்கையில் தங்கி இருந்தார். அப்போது இலங்கை முழுவதும் அவர் பல இடங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

பின்னர் நவம்பர் 29ந் தேதி தலைமன்னார் வழியே இந்தியா திரும்பினார். காந்தியடிகள் தனது குறுகியகால பயணத்தால் சுதந்திரம் பற்றிய தாகம் இலங்கையர்களிடமும் உருவானது.

*இலங்கை இந்திய காங்கிரஸ்*

இந்தியாவை தாயகமாக கொண்ட இந்தியவம்சாவளி மக்கள் ஆங்கிலேய ஆட்சியின் போது தேயிலை தோட்டங்களில் வேலைக்காக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்காக காந்தியின் பரிந்துரையின் பேரில் 1939ம் ஆண்டு இந்திய இலங்கை காங்கிரஸ் என்ற அமைப்பு ஜவகர்லால் நேருவால் அமைக்கப்பட்டது.

இலங்கை வாழ் இந்தியர்களை அந்த அமைப்பின் கீழ் கொண்டு வரும்படி இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் பிரதிநிதிகளை கொழும்பில் நேரு ஒன்றுகூட்டினார். அப்போது இலங்கையில் இருந்த பிரதான இந்திய சங்கமான இலங்கை இந்திய மத்திய சபை மற்றும்இலங்கை இந்திய தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகள் 1939ம் ஆண்டு ஜூலை 25ந் தேதி இலங்கை இந்திய காங்கிரசை உருவாக்கினார்கள். பின்னர் இது கட்சிகளாக பிரிந்தது.

*இந்திய உணர்வுடன்*

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கைக்கு 1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது. இதனால் இன்றும் காந்தி ஜெயந்தி, காந்தி இலங்கைக்கு வந்த தினம் என்பன கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் இன்று சுமார் 15 லட்சம் பேர் இந்திய வம்சாவளி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் இலங்கையில் வாழ்ந்தாலும் இந்திய உணர்வுடன் சுதந்திர தினத்தை கொண்டாடுவார்கள்.

மகாத்மா காந்தியின் உருவச்சிலை இலங்கையின் பல பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளது போல தென்னிந்திய வம்சாவளி தமிழர்கள் அதிகமாக வாழும் மலையக பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் இந்திய சுதந்திரதினத்தின் போது மகாத்மாவின் உருவ படத்துக்கும் சிலைகளுக்கும் மலர் மாலை அணிவித்து சுதந்திரத்தை நினைவு கூருவார்கள்.

**நன்றி - தினத்தந்தி 14.08.2021**

# கிளிநொச்சி மண்ணில் நிமிர்கிறது

## "வையத்து மக்களெல்லாம் வாழ வழி சமைத்த காந்தி மகானின் சிலை"



மகாத்மாவின் 152 வது ஜெயந்தி தினத்தை இன்று உலகமெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. காரணம் தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த தர்மத்தின் வடிவென்பதாலேயாம். மகாத்மா தன் தத்துவங்களை வாயாற் சொல்லாமல் வாழ்முறையால் எடுத்துக் காட்டினார். மகாத்மா வோடியைந்த தத்துவங்கள் உண்மை அஹிம்சை என்பனவாகும். இவற்றைச் சமூகத்தோடு சார்த்திக் கையாளும் போது அவை சத்தியாக்கிரகம், அறவாழ்வு அதாவது நம்பிக்கைச் சொத்துமுறை என்ற வாழ்வு முறைகள் தோன்றுகின்றன. இவற்றுள் நம்பிக்கைச் சொத்து முறையே மனித சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத ஒரு சமூக ஒழுக்கமாகும். இதன் முழுப்பயனையும் பண்பையும் நாம் அறித்து கொள்ளல் அவசியம். மகாத்மா இன்று உலகில் இல்லை. ஆனால் உலக மக்கள் உள்ளங்களில் இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பாரென்பதில் ஐயமில்லை.

மகாத்மா காந்தியடிகளாரின் அடியொற்றி வாழ்ந்தவர் தான் நீர் வளமும் நில வளமும் உடைய நீர்வேலியில் வந்துதித்த உயர் திரு சி.க.வேலாயுதபிள்ளை அவர்கள். அவர்களால் கிளிநொச்சி எட்டாம் வாய்க்கால் உருத்திரபுரத்தில் 1953இல் ஆரம்பிக்கப்பட்டு ஆல் போற்றழைத்து அறுகுபோல் ஊன்றி சேவை புரிந்து வரும் காந்தி நிலையமும் சிறுவர் இல்லமுமாகும்.1955- 1956 ஆண்டு காலப் பகுதியில் காந்தி நிலையத்தில் 60 க்கு மேற்பட்ட தாய் தந்தையற்ற பிள்ளைகள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வரலாயினர். சி.க.வேலாயுதபிள்ளை அவர்களை காந்தீயம் பெரியவர்களான திருகோணமலை பொ.கந்தையா ஆசிரியர் அவர்கள், சுழிபுரம் அ.ஆறுமுகம் அவர்கள் பண்டிதர் சரவணமுத்து அவர்கள் நீர்வேலி பண்டிதர் துரைசிங்கம் அவர்கள் ஆகியோர் "காந்தீயம்" என்றே அழைத்து வந்தனர். உருத்திரபுரம் சூழலிலுள்ளோர் அவரை பெரியண்ணா என்றே அழைக்கலாயினர்.

பெரியண்ணாவின் வழி வந்தோர் சிலர் கூடி மகாத்மா காந்தியடிகளாரின் சிலையினை உருவாக்கி காந்தி மகானின் 152 ஆவது ஜெனனதினமாகிய 2021 ஒக்ரோபர் 2ம் திகதி திறப்பு விழா செய்கின்றோம். காந்தி நிலைய நிர்வாகம் இப்பணியினை நிறை வேற்றியிருப்பதில் அக மகிழ்வடைகின்றது. எளிமையான வாழ்க்கை முறை, சத்தியம், அஹிம்சை, கடினஉழைப்பு ஏற்றத்தாழ்வற்ற சமநோக்கு எடுத்த கருமத்தை நிறைவேற்றும் பண்புறுதி கிராமியக் கைத்தொழில் ஈடுபாடு போன்ற உயர் பண்புகளைக் கைக் கொண்டு உலகிற்கு உன்னதமான வழியைக் காட்டிச் சென்றுள்ளார் வையத்து மக்களுக்கு ஒளி விளக்காக வாழ்ந்து காட்டிய மகான் காந்தி வாழ்க வாழ்க எம்மான்.

**கலாபூஷணம் திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை J.P**
**செயலாளர், காந்தி நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவர்க்கும் இனியர் க.மு.நடராஜன்



உலகிலே சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பவர்கள் வெகு சிலரே. அப்படிப்பட்டவர்களைச் சந்திக்கும் வாய்ப்பையும் மிகவும் அருமையாகவே நாம் பெறுகிறோம். எனவே தான் அவர்களை முதலிலே சந்தித்த தருணங்கள் எம்மனதில் ஆழப்பதிந்து விடுகின்றன.

அத்தகைய மாமனிதர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பை மார்கழி 2011இல் மதுரையிலே நாம் பெற்றோம். அப்போது மதுரையிலே அகில இந்திய சர்வோதய மண்டலின் வருடாந்திர மாநாடு நடைபெற்றது. இலங்கையைச் சேர்ந்த சில காந்தியத் தொண்டர்கள் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். எமது பெற்றோர்கள் திரு.சோ.க. தம்பிப்பிள்ளையும் திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளையும் இந்தக் குழுவிலே இடம் பெற்றார்கள். அவுத்திரேலியா வின் சிட்னி மாநகரத்தில் இருந்து நாமும் இலங்கை சென்று அந்தக் குழுவினருடன் இணைந்து கொண்டோம்.

மதுரை சென்ற எம்மை அன்போடு வரவேற்றார் திரு.க.மு. நடராஜன் அவர்கள். மாநாட்டுப் பணிகள் இருந்த போதும் எம்முடன் நெடுநாட்கள் பழகியவர் போல மிகவும் இயல்பாகப் பேசினார். இலங்கையிலே நடக்கும் காந்தியப் பணிகள் பற்றி விபரங்கள் அறிந்து கொண்டார்.

அதன் பின் மதுரை சென்ற போதெல்லாம் நாம் அவரைச் சந்தித்திருக்கின்றோம். எப்பொழுதுமே அவர் எம்மை அன்போடு வரவேற்றுப் பேசி நாம் மேலும் நற்பணிகள் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்துவார்.

காந்தியக் கொள்கைகள் வெளிநாடுகளிலும் பரவவேண்டும் என்பதிலே அவர் மிகவும் ஆர்வமாக இருந்தார். அதனால் திரு.மாரியப்பன் அவர்களுடன் இலங்கைக்கும் வந்தார். அப்போது கொழும்பில் இருந்த எமது பெற்றோரின் இல்லத்துக்கும் வந்து பல காந்திய அன்பர்களைச் சந்தித்து அளவளாவி எம்மையெல்லாம் ஊக்குவித்தார்.

அப்படிப் பேசியதுடன் நின்று விடாமல் தமிழ்நாடு சர்வோதய மண்டலின் செயலாளர் திரு.இராஜேந்திரன் ஐயா அவர்களையும் திரு.தேவதாஸ் காந்தி ஐயா அவர்களையும் இலங்கைக்கு அனுப்பி வைத்துக் காந்திய இயக்கத்துக்குப் பேருதவி செய்தார். ஈழப்போராலே இன்னலுற்றிருந்த எமக்கு இவர்களின் வரவும் அன்பும் பெரும் ஆறுதலைத் தந்தது.

திரு.தேவதாஸ் காந்தி ஐயா அவர்கள் மீண்டும் இலங்கை வந்து எம்முடன் நீண்ட காலம் தங்கிப் பல பணிகளை ஆற்றவும் திரு.நடராஜன் ஐயா அவர்களே காரணமாக இருந்தார்.

நான் எழுதிய மரபுக் கவிதைகளின் தொகுப்பாக "எழில் பூக்கள்" என்னும் ஒரு கவிதை நூலை சிட்னியில் வெளியிட்டிருந்தேன். அதை மதுரைத் தமிழர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்க விரும்பினேன். அதற்கு திரு. இராஜேந்திரன் ஐயா அவர்கள் பெரிதும் உதவினார்கள். திரு.நடராஜன் அவர்கள் மனமுவந்து அந்த விழாவைத் தலைமை தாங்கிச் சிறப்பித்தமை இன்றும் எமது நெஞ்சிலே பசுமையாக இருக்கின்றது.

அவருடைய திடீர் மறைவு இலங்கைக் காந்தி இயக்கத்துக்கும் ஒரு பேரிழப்புத் தான். எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் தாண்டி நாம் காந்தியக் கொள்கைகளைப் பரப்பிச் செயற்படுத்துவதே அவருக்கு நாம் செய்யும் இதயப் பூர்வமான அஞ்சலியாக இருக்கும். எனவே அதிலே உறுதியாக நின்று செயற்படுவோம்!

*கவிஞர் த. நந்திவர்மன்*
*சிட்னி, அவுத்திரேலியா*

**அமரர் திரு.க.மு.நடராஜன் அவர்கள் பற்றிய இங்குள்ள இரு குறிப்புகளும் இந்தியாவிலிருந்து வெளிவரும் "சர்வோதயம் மலர்கிறது" ஜீன் 2021 இதழில் பிரசுரமானவை என்பது குறிப்பிடத்தக்கது.**

## அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் அனுதாபச் செய்தி



மதுரை காந்தி அருங்காட்சியக செயலாளராகவும் சர்வோதய இலக்கியப் பண்ணையின் துணைத்தலைவராகவும் பொறுப்பு வகித்த மூத்த காந்தியத் தலைவர் க.மு.நடராஜன் தனது 89வது வயதில் 24.05.2021 அன்று காலமானார். அன்னாரின் இழப்பு காந்திய இயக்கங்களுக்கும் காந்திய செயற்பாட்டாளர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். க.மு.நடராஜன் அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைகழகத்தின் கல்விப் பேரவை உறுப்பினராகவும் காந்தி கிராம பல்கலைக் கழகத்தின் ஆட்சிப்பேரவை உறுப்பினராகவும் பதவி வகித்ததோடு "சர்வோதயம் மலர்கிறது" என்ற மாதப் பத்திரிகையை தமிழிலும் ஆங்கிலத்திலும் அதன் ஆசிரியராக இருந்து நடத்தி வந்தவர். 1952ல் பிரிட்டிஷாரின் தயாரிப்பில் உருவான துணிகளைப் புறக்கணிப்போம் என்ற அறைகூவலை ஏற்று கதர் ஆடைக்கு மாறியவர் க.மு. நடராஜன் அவர்கள். அருப்புக் கோட்டை பண்ணை மூன்றடைப்பு கிராமத்தைச் சேர்ந்த இவர் சர்வோதய இயக்கங்களில் இணைந்து நீண்டகாலமாக மக்களுக்குப் பணியாற்றி வந்தார். ஜே.சி.குமரப்பா, தர்மாதிகாரி, விமலா தாக்கர், பி.சி. கோஷ், க்ரிபளானி, கிருஷ்ணம்மாள் ஜெகன்நாதன் ஆகிய காந்திய ஆளுமைகளுடன் நெருக்கமாகப் பணியாற்றிய இவர் இலங்கையில் காந்தியப் பணியாற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அழைப்பை ஏற்று இங்கு வந்து இலங்கை காந்திய அன்பர்களுடன் உரையாடல்களில் ஈடுபட்டார்.

அவரை எமது சங்கத்தலைவரும் மூத்த காந்தியவாதியுமான சோ.க தம்பிப்பிள்ளை அவர்களின் கொழும்பு இல்லத்தில் சந்தித்து உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது. கடந்த 70 ஆண்டுகளாக காந்திய இயக்கங்களில் உழைத்த அன்னாரின் பணியை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை காந்திய அன்பர்கள் சார்பில்
எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

## 152 வது காந்தி ஜெயந்தி தின வாழ்த்துச் செய்தி



"என் வாழ்க்கையே என் மக்களுக்கு நான் விடும் செய்தி" எனக் கூறியவரும் இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டு இருப்பவருமான மகாத்மா காந்தியின் 152வது காந்தி ஜெயந்தி தினம் காந்தி சிறுவர் இல்லத்தில் கொண்டாடப் படுவதனை இட்டு அக மகிழ்ந்து இதற்கு காரணமான அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இன்றைய இளைஞர்கள் காந்தியக் கொள்கையுடன் காந்தியவாதியாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்துடன் இயங்கி வரும் காந்தி சிறுவர் இல்லம் நீண்ட காலமாக தன் பணியை ஆற்றி வருகிறது. இந்நிறுவனம் இவ்விழாவை வருடாந்தம் சிறப்பாக நடத்தி வருவது சிறப்பானதாகும்.

இந்நாளில் காந்தி சிலை திறந்து வைக்கப்படுவதும் **"காந்தீயம்"** பத்திரிகை வெளியீடு செய்வதும் சிறப்பான தாகும். இவை அனைத்திற்கும் எம்மோடு காந்தியக் கொள்கையில் கைகோர்த்துப் பயணிக்கும் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**கி.விக்னராஜா**
**தலைவர்**
**காந்தி சிறுவர் அபிவிருத்தி பயிற்சி நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதறிஞர் ஆ. சபாரத்தினம்: மிகச்சிறந்த அம்சங்களை தனது நீண்ட வாழ்க்கையினூடாகத் தம் உள்ளத்தில் ஒன்றிணைத்து எமக்கு வழங்கியவர்.

தனது கலை இலக்கிய சமூக மற்றும் கல்விப் பணிகளுக் கிடையில் காந்தியப்பணியும் மேற்கொண்டவர் ஆ.சபாரத்தினம் அவர்கள். அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மீளவும் இயங்குவதற்கு உந்துசக்தியாக அவர் இருந்தார். அன்னார் பற்றி **நா.நவராஜ்** எழுதி **"ஜீவநதி"** இதழில் பிரசுரமான கட்டுரையை நன்றியோடு இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

**-ஆ.ர-**

'எனது இனிய நண்பர் ஆறுமுகம் சபாரத்தினம் அவர்களுக்கு மறக்க முடியாத சில அனுபவங்களுக்காக நன்றி கூற விரும்புகிறேன். போர்க்கஷ்டங்களைப் பொருட்படுத்தாது யாழ்ப்பாணம் முழுவதும் திரிந்தோம். குண்டுகள் வெடிக்கும் ஒலிகளுக்கு மத்தியில், ஒன்றும் நடக்காதது போல அவர் மிர்சியா எலியாடாவின் கருத்துக்கள் பற்றிய தமது மதிப்பீட்டை உணர்த்திக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணக் கலாசாரத்தின் முக்கிய காவலராகிய பண்டிதர்களுக்கு பௌத்தம் பற்றி விரிவுரைகள் ஆற்றினோம். எல்லாவற்றுக்கும் மேலாகச் சபா தனது சொந்த உதாரணத்தின் மூலம் சைவத்தின் மிகச்சிறந்த அம்சங்களை எனக்கு உணர்த்தினார். அவற்றை அவர் தமது நீண்ட வாழ்க்கை யினூடாகத் தம் உள்ளத்தில் ஒன்றிணைத்திருக்கிறார்.'



மூதறிஞர் ஆ.சபாரத்தினம்
பிறப்பு 31.10.1928 — இறப்பு 01.05.2020

என்று மூதறிஞர் ஆ.சபாரத்தினம் அவர்கள் பற்றி 'குடியேற்ற காலத்துக்கு முற்பட்ட தமிழகத்திலும் ஈழத்திலும் பௌத்தம்' என்ற நூலின் முகவுரையில் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீற்றர்சுஷால்க் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுவது போல தனது வாழ்க்கையினூடாகத் தம் உள்ளத்தில் சைவத்தின் மிகச்சிறந்த அம்சங்களை மட்டுமல்லாது பல துறைகளின் மிகச்சிறந்த அம்சங்களையும் அவர் ஒன்றிணைந்திருந்தார். அவற்றின் வழியிலேயே தனது வாழ்வினையும் அவர் இட்டுக்கொண்டார். அதனால் செயற்கரிய செய்கின்ற பெரியவராக அவர் எம் முன்னே விளங்கினார். எமது பிள்ளைகளுக்குக் காட்டுவதற்கு நல்ல முன்மாதிரிகள் இல்லை எனப் பலரும் ஏக்கத்தோடு கூறிநிற்கும் இக்காலத்தில் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக எம்மிடையே இருந்த ஒரு நல்ல மனிதர்,01.05.2020 அன்று காலமாகி விட்டார் அவர் நினைவாக இன்றைய தலைமுறைக்குச் சில குறிப்புக்கள்.

மூதறிஞர் ஆ.சபாரத்தினம் அவர்கள் நாரந்தனையில் பிறந்தவர். தந்தையார் ஆறுமுகம், தாயார் அன்னம்மா. தந்தையார் நாவலர் பெருமான் காலஞ்சென்ற இரண்டு ஆண்டுகளின் பின் அவரது பாடசாலையில் படித்தவர். அதனால் சைவாசாரம் மிகுந்து முதியவயதில் தேவாரம், ஞானக்கோவை படித்துப் பொழுதைக்கழித்தவர். தந்தையின் 'ஞானக்கோவை'யை இடம்பெயரும்வரை தம்முடன் வைத்திருந்த தாய்க் கவலையுடன் கூறும் அவர், பின்னர் அந்நினைவாக ஒரு பழைய புத்தகக்கடையில் 'ஞானக் கோவை' ஒன்றை வாங்கி வைத்திருந்தார். தந்தையாரால் உருவாக்கப்பட்ட சமயச் சூழல் இளைஞர் சபாவின் உள்ளத்தில் சமயப்பற்றை வளர்த்ததோடு புகழை விரும்பாது, குடத்துள் விளக்காய் இருக்கும் எண்ணங்களையும் அவருள் விதைத்தது. ஆரம்பக்கல்வியை 1933 இல் நாரந்தனை கணேச வித்தியா சாலையிலும் அதனைத் தொடர்ந்து ஆங்கிலபாடத்தைக் கற்பதன் பொருட்டு 1938 இல் யாழ்ப்பாணம் பெருமாள்கோயில் சன்மார்க்க போதனாப் பாடசாலையிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார். இங்கு திருமதி பொன்னம்மா குலசேகரத் திடம் ஆங்கிலத்தை ஆரம்பம் முதல் படித்து ஆங்கிலக் கவிதைகளை நயக்கும் பேறு பெற்றார். மீண்டும் 1941 இல் இடைநிலைக் கல்வியைத் தொடர்வதற்காக கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார். Junior School Certificate எனப்படுகின்ற கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்கான கல்வி வரை மூன்று ஆண்டுகள் அங்கு படித்தார். அரசாங்கப் பரீட்சைக்கு உரிய காலத்தில் விண்ணப்பம் அனுப்ப முடியாமல் போனதால் மீண்டும் 8 ஆம் வகுப்பை 1944 இல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தொடர்ந்தார். பின்னர் மேற்படிப்பினை 1946 அளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்றார். அக்காலத்தில் (1946 இல்) துறவியாக வேண்டும் என்ற மனப்பாங்கில் இந்தியா சென்றார். அங்கு பல இடங்களில் அலைந்து, துறவு மனப்பான்மை இருந்தால் பட்டதாரி யாகிய பின் வந்து சேரலாம் என்ற நினைப்பால் மீண்டும் இலங்கைக்கு வந்து கல்வியைத் தொடர்ந்து 1947 மார்கழி மாத S.S.C பரீட்சை எழுதினார். 1948 பங்குனியில் பரீட்சைமுடிவுகள் வெளிவந்து சித்தியடைந்த அடுத்த நாளே நாரந்தனை கணேச வித்தியாசாலையில் மேலதிக ஆங்கில ஆசிரியனாகப் படிப்பிக்க இந்துபோர்ட் இராசரத்தினம் இடம் கொடுக்க, நாரந்தனை கணேச வித்தியாசாலையில் ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்றுப் படிப்பித்தார். படிப்பிக்கும் காலத்தில் கார்த்திகை, மார்கழியில் நடைபெற்ற தமிழ், ஆங்கில பரீட்சையில் சித்தி எய்தி 1949 தை 15 இல் கொழும்பு சென்று இரண்டு ஆண்டுகள் மகரகம தேசிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்தார். அங்கு கா.பொ.இரத்தினம், கலாநிதி வ. பொன்னையா ஆகியோரிடம் தமிழைச் சிறந்த முறையில் கற்றார். தொடர்ந்து 1952 இல் புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். 1964 இல் B.A பட்டத்தினை வெளிவாரியாகப் பெற்றார். 33 ஆண்டுகள் ஆசிரியராகவும் தொடர்ந்து 1984 – 88 காலப்பகுதியில் கரம்பொன் சண்முகநாத வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் புனித அந்தோனியார் கல்லூரியில் படித்தபோது நிறைய வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசன் (அரசரத்தினம்) என்பவர் இவருக்கு ஊட்டினார். அதனால் நூலகங்களே இவருக்குப் பொழுது போக்கிடங்களாயின. இதனால் நூலகத்தில் என்ன புத்தகம் எங்கேயிருக்கிறது என்ற விடயத்தோடு அது பற்றிய விடயங்களையும் அதன் எழுத்தாளர்கள் பற்றிய விலாவாரியான கதைகளையும் அவர் கூறுவதில் வல்லவராக இருந்தார். அக்காலத்தில் புனித அந்தோனியார் கல்லூரியில் படிப்பித்த சில்லாலையைச் சேர்ந்த ஜோசப் அடிகளார் தான் லண்டனில் கற்றுத்திரும்பிய காலம் முதல் அப் பாடசாலையில் வரலாறு கற்பித்து, இவரது இலக்கியக்காதலை வரலாற்றுத் துறைக்குத் திருப்பிவிட்டார். அதனால் பின்னாளில் பேராதனை பட்டப்படிப்புக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்றதுடன் 'புதுமுறைச் சரித்திரம்' என்ற வரிசை நூல்களை எழுதி இவர் பிரபலமடைய வாய்ப்புக்கிடைத்தது. 1965 - 72 இல் இவரது வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் பற்பல பதிப்புகள் வெளிவந்து இலங்கை முழுவதிலும் பயன்பட்டன. அத்தோடு படிக்கும் காலத்தில் (1945 இல்) க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு பௌதிகவியல், கணிதம் கற்றாலும் விஞ்ஞானத்தில் நாட்டமில்லாதிருந்த இவர், வீரகேசரி வாரப் பத்திரிகை ஆசிரியர் தமது பிள்ளைகள் A/L விஞ்ஞானப் பிரிவில் படிக்கிறார்கள் என்றும் அவர்களுக்கு ஏற்ற வாசிப்பு விடயங்களை வீரகேசரி வார இதழில் கட்டாயம் வெளியிட வேண்டும் என்று கேட்டதற்கிணங்க தான் எடுக்கும் 'ரைம்' அமெரிக்க வார சஞ்சிகைகளில் வரும் விஞ்ஞானம் சார்ந்தவற்றைப் படித்து அவற்றுள் மாணவர்களுக்குப் பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்துச் சுருக்கியும் விளக்கியும் விஞ்ஞான, கணித வரலாறுகள் சார்ந்த பற்பல கட்டுரைகளை எழுதினார். மேலும் யாழ் நூலகத்தில் இருந்த சற்றுப் பழைய ஆங்கிலச் சஞ்சிகைகளை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வசதி இருந்தது இவர் அவற்றை எடுத்துச்சென்று படித்து மொழி பெயர்த்தும் எழுதினார். இவரது இச்செயலை இவரது மகன் படிப்பிக்கும் வட்டுக்கோட்டை தொழிநுட்பக் கல்லூரியின் ஆசிரியர் அறையில் அவரது நண்பர்கள் 'யாரப்பா இந்த மனிசன்! முதல் வாரத்தில் ரைம், நியூஸ் வீக்கில் வருகின்றவை அடுத்த வாரத்தில் வீரகேசரியில் வந்து விடுகின்றனவே.'என்று (தமது நண்பனின் தகப்பனார் தான் அது என்பதை அறியாது) பேசிக் கொண்டார்களாம். மகன் மௌனமாக இருந்தார்.இக்காலப்பகுதியில் இங்கிலாந்தின் 'கார்டியன்' சஞ்சிகைகளில் வரும் கருத்துக்களை உள்வாங்கித் தினகரனில் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். 1980 இக்குப் பின் தினகரனிலும் வீரகேசரி வார இதழின் விஞ்ஞானமஞ்சரியிலும் சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு இவரது கட்டுரைகள் வெளிவந்தன.

ஓய்வு பெற்ற பின்னர் மருத்துவ வரலாற்றை லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் கற்பித்ததோடு வடமொழியான சம்ஸ்கிருதத்தை சீதாராம சாஸ்திரியிடம் நன்கு கற்று அவரது அபிமானமுள்ள மாணவராக இருந்து பேராதனை மற்றும் லண்டன் பரீட்சைகளிலும் வடமொழியை ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்து அம்மொழியிலும் பாண்டித்தியம் உடையவராக விளங்கிய படியால் ஆரிய-திராவிட-பாஷா அபிவிருத்திச் சங்கப் பரீட்சைகளுக்கு வடமொழியையும் கற்பித்தார்.

இவர் தன்வாழ்நாளில் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. பள்ளி மாணவனாயிருந்த போதே நாரந்தனை இளைஞர் சங்கத்தை அமைத்து இந்தியாவிலிருந்து சஞ்சிகைகளை எடுப்பித்து அரிய வாசிக சாலையை 10 ஆண்டுகள் நடத்தினார். அக்காலத்தில் வெளிவந்த கலைமகள், கிராம ஊழியன், சிந்தனை போன்ற இலக்கிய சஞ்சிகைகளில் எழுதிய பலருடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். சர்வோதய இயக்கத்தில் மனம் பதிந்து அது பற்றிய நூல்களை எடுத்துப் பலருக்கும் வழங்கினார். 'வினோபாஜியின் கீதைப் பேருரைகள்' படித்துப் பண்டிதமணி தம் கருத்துக்களை எழுதி வைத்திருந்த பிரதியைத் இவவு தமது பொக்கிஷமாகப் போற்றிவைத்திருந்தார். நீர்வேலியில் நிகழந்த சர்வோதய மகாநாடு தொடர்பான ஆர்வம், சின்னமடுவில் அகில இலங்கை ஹரிஜனசேவாசங்கசெயலாளராயிருந்து ஆண்டுவிழாவை ஏற்பாடு செய்வதற்கு இவரைத் தூண்டியது. அத்துடன் நாரந்தனை, கரம்பன் கிராமங்களில் கிராம முன்னேற்றச் சங்கம் சனசமூகநிலையம், இந்துசமய வளர்ச்சிக்கழகம் போன்ற அமைப்புகளிலும் தனது பங்களிப்பை வழங்கினார். Saturday Review, திசை போன்ற வார சஞ்சிகைகளின் நிர்வாக சபை

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சம் போக்கி ஆசிரமத்தாரை ஓரணியில் திரட்டியவர்

வாழ்க காந்தி வாழ்நெறி வளர்பிறை போலவே
வீழ்ந் தொழிக தீச்செயல் வியலிடத்தை விட்டே

பறந்து வந்த பல்லினச் சிறார்தம்மை யணைத்தே
பாடஞ் சொன்னார் பண்பொழுக்க மிரண்டையு மிணைத்தே
இறப்பானது பழைய இழிநிலைக் கல்வி முறைமை
ஏறுமுக மானது தாய்மொழிக் கல்வியின்புத் திறைமை

வாழ்க காந்தி........

எட்டுத் திசையு மவர்பெயர் எதிரொலித்து நிறையட்டும்
எஞ் ஞான்றும் இவ்வுலகம் அன்பின் விடியலில் உறையட்டும்
எட்டிப்பூ அணிவித் தெம்மானுளம் குளிர் விப்பம்
எங்கள் கடமை இஃதென எல்லார்க்கும் தெளி விப்பம்

வாழ்க காந்தி........

கண்ணியமிகு கைத்தொழிலைக் காதலாய்க் கற்றுக் கொடுத்துக்
கடைந் தெடுத்தார் தொண்டர்தமைக் கருணைக்கண் தொடுத்து
நுண்மை செறி தையற்றொழில் தன்னால் பாதரட்சைத் தொகையில்
நன்குருப் பெற்றதே நவீனத்துவம் வண்ண வகையில்

வாழ்க காந்தி........

ஏட்டைப் பழித்த அறியாமையை எரியூட்டியதே எது
ஏந்தல் காந்தி எடுத்தியம்பிய கல்விப் பொருளே யது
நாட்டின் பன்மொழி வளர்ச்சி நிகழ்ந்தது எதனாலே
நசிபட் டோரைத் தூக்கியதும் நூலே யதனாலே

வாழ்க காந்தி........

அச்சம்போக்கி ஆசிரமத்தாரை ஓரணியில் திரட்டி
அழகுக்கலை கலைத்திறன் கலையுணர்வு அனைத்திலும் மருட்டி
தச்சுத்தொழில் இருக்கைகள் செய்யத் தலை செய்தார் காந்தி
தடையின்றி சுயதேவை நிறைவுற்றதால் துளிர்த்தது சாந்தி

வாழ்க காந்தி........

அடுத்தவரை ஆய்ந்தறிதற் கண்ணலார் கையாண்ட அளவுகோல்
அறம் பொருளின்பம் உயிர்காப்பில் அவர்தம் திறம் உழவுசால்
எடுத்தோர் ஒருபொழுதும் கையேந்தார் என்கிறது காந்தியஉலகு
எழுச்சிதரு மின்னுரையைச் செவிமடுக்க எழுகிறது பார் நிலவு

வாழ்க காந்தி........

எத்தனைபிறப் பெடுப்பினும் எங்கள் தாதா காந்தியே
இதில் மாற்ற மில்லையென் றியம்பிணை முழ வேந்தியே
அத்திரமாய்த் துனிவரினும் அஞ்சேல் காந்திய முள்ளவரை
அகிம்சை சத்திய மிரண்டுமு னரணமா னகலும் வரை

வாழ்க காந்தி........

**காந்தி ஜெயந்தி தின சிறப்புக் கவிதை**

*கவிஞர் மணிமன்றன்,*
*யாழ்ப்பாணம்*

## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
02 - 05 - 1946

**மறைவு**
02 - 11 - 2017

### அமரர்
## திருநாவுக்கரசு இராசநாயகம்

*கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம சைவ சிறுவர் இல்லம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் காந்தி சிறுவர் இல்லம் ஆகிய நிறுவனங்களின் முன்னாள் தலைவரான அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தில் (02.11.2021) அன்னாரின் சமய, சமூக, காந்தியப் பணிகளை நினைவு கூருகிறோம்.*

**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**

## அன்பர் திரு கலா கணேசலிங்கம் அவர்கள் அருளியது



அருளமுத அடிகளின் (வினோபா)
அவதரிப்பு நாளில்
அனைவரும்
அகமகிழ்வுடன்
அவரை வாழ்த்தி துதிப்போம்
அருளான அமுதத்தை அதிகாலை
எமக்களிக்கும் தேவதாஸ் காந்தி ஐயாவுக்கும்
இதயம் நிறைந்த அருள் நன்றி
இதயங்களில் இறையுணர்வும்
ஆன்மீகப் பற்றும்
வாழும் செல்நெறியையும்
அமுத வாக்காக்கி வாழ்ந்து காட்டிய
அடிகளை வாழ்த்தி வணங்கி
அவரின் அமுதம் பருகி ஆனந்திப்போம்
வாழ்க வளமுடன் வாழ்க வையகம்.....

**புரட்டாதி 11 அடிகளாரின் 127 வது அகவை தினம்**

## 152 ஆவது காந்தி ஜெயந்தி தினம்

யாழ் இந்திய துணைத்தூதரகமும் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் நடத்தும் காந்தி பிறந்த தின நிகழ்வுகள் அக்டோபர் 2ம் திகதி காலை 9.00 மணிக்கு அரியாலையிலுள்ள காந்தி சிலையடியிலும் 10 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியிலுள்ள காந்தி சிலையடியிலும் கொவிட் – 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி எளிமையான முறையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ் இந்திய துணைத்தூதுவர் உயர்திரு ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் அவர்கள் கலந்து கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினராக இருந்து அவற்றின் செயற்பாடுகளில் பெரிதும் கவனம் செலுத்தினார். அக்காலத்தில் சுவீடன் நாட்டுப்பேராசிரியர் பீற்றர்சுஷால்க்கின் தொடர்பு ஏற்பட்டது. அவர் வேண்டுகோளுக்கியைந்து யாழ்ப்பாணத்துச் சமயங்கள் பற்றிய விளக்க நூலோதி ஒன்றுக்கான அத்திவார வேலைகளை மேற்கொண்டார். ஆங்கிலத்தில் அவை எழுதப்பட்டன. சைமன் காசிச்செட்டியின் 'தமிழ் புளுற்றாக்' போன்ற நூலாக அது பரிணமிக்கவேண்டும் என்ற விருப்புடன் அதனை அவர் மேற்கொண்டார். அதற்காகச் சுவீடன் உப்ஸாலா பல்கலைகழகத்தில் சமயங்களின்வரலாற்றுத் துறையில் மூன்றுமாதம் தங்கியிருந்து பேராசிரியரின் தொகுப்புகளை நூலகவிஞ்ஞான முறையில் வகைப்படுத்தினார். அவ்வாறு அவரால் மேற்கொள்ளப்பட்ட அவ்ஆக்கங்களைத் தான் நூலாக்குகின்றேன் என்று நூலகர் ஒருவ வாங்கிச்சொன்றார். அது கிடப்பில் கிடக்கிறது போலும். ஸ்ரொக்ஹோம் உப்ஸாலா பல்கலைக்கழகங்களில் இறையியல். பின்பட்டப் படிப்பு மாணவர்களுக்குச் சைவசித்தாந்தம், தமிழர் வாழ்வும் பண்பாடும் பற்றிய விரிவுரைகளை நிகழ்த்தினார். சுவிடன் கிறிஸ்தவ திருச்சபையின் ஆதரவில் சிக்ருனா என்னும் இடத்தில் நடந்த ஐந்து நாள் மகாநாட்டில் கலந்து கொண்டார். போராட்டம் நிகழும் இஸ்ரேல் அயர்லாந்து, சூடான், இலங்கை போன்ற நாடுகளில் சமாதானம் தோன்ற என்ன செய்யவேண்டும் என அங்கு ஆராயப்பட்டது அதில் யாழ்ப்பாணத்தில் 'இந்து - கிறிஸ்தவ எதிர்ப்பாடு - இன்று' என்னும் பொருள் பற்றிக் கட்டுரை வாசித்தார். அது கொழும்பு Sunday Times இலும் சுவீடன் 'லங்கா' சஞ்சிகையிலும் வெளிவந்தது.

மூன்று மாதம் அங்கிருந்து நோர்வே, சுவீடன், பின்லாந்து நாடுகளில் கீழ்த்திசை மதங்கள் கற்பிக்கும் பல்கலைக்கழகங்கள், உயர் நிறுவனங்கள் போன்றவற்றின் நூலகங்களில் தங்கி இறையியற் கல்வி, சமய வரலாறு, சமயங்களின் ஒப்பீடு பற்றிய ஆய்வுகள் அங்கு எப்படி வளர்கின்றன என்பதை அவதானித்தார். ஓராண்டு அங்கு தங்கும் படி வற்புறுத்தியும், நாட்டு மற்றும் வீட்டு நிலைகளால் தாயகம் திருப்பினார். 1994 இல் மீண்டும் அங்கு பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்றும் அதனை பயன்படுத்த அவர் நினைக்கவில்லை. இங்கு அதனிலும் முக்கியமான, பண்டிதமணி கணபதிப்பிள்ளையால் 32 கொப்பிகளில் எழுதி வைக்கப்பட்டிருந்த உப அதிபர் கைலாசபதியின் சிந்தனைகளைத் தேடிப் பாதுகாக்கும் பணியில் பேராசிரியர் சுசீந்திரராசவுடன் ஈடுபடவேண்டியிருந்தது. அப்பணியில் முழுவதும் தம்மை ஈடுபடுத்தினார். இதற்காக 1991 முதல் 1994 வரை சுசீந்திரராஜாவின் அறையில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இருந்து 32 கொப்பிகளையும் நூலாக்க உதவி செய்தார். அது நூல்வடிவம் பெற்று 700 பக்கங்களுடன் பல்கலைக்கழக வெளியீடாக மலர்ந்தது.

1980 களில் காவலூர் இலக்கிய வட்டம் தொடங்கிய பின் காவலூர் ஜெகநாதனின் தூண்டுதலால் மல்லிகைக்கு இலக்கிய வட்டத்தில் பேசுவதற்கு ஆயத்தப்படுத்திய குறிப்புக்களைக்கட்டுரைகளாக எழுதினார். ஏ.ஜே. கனகரத்னாவல் 'காவல்நகரோன்' எனப் புனைபேர் இடப்பட்டு மல்லிகையில் அக்கட்டுரை வெளிவந்தது. அதன் பின் சுமார் 18 கட்டுரைகள் வரை மல்லிகையில் எழுதினார். ஜுலை - 1993மல்லிகை இதழ் இவரது அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்தது. உள்ளே இவர் பற்றிய அறிமுகத்தைக் காரைசுந்தரம் பிள்ளை வரைந்திருந்தார். அதில் 'வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய சமயதத்துவத் துறைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர், சமயம் ஒரு வாழ்க்கைநெறியாக அமைய வேண்டும் எனும் சமரசக் கொள்கை யுடையவராக உள்ளார். இவர் சுத்த சைவர், எளிமையானவர், காந்திய சிந்தனையிலும் அகிம்சையிலும் நம்பிக்கையுடையவர். சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்து காட்டிவரும் பெரியவர். மிகவும் சிறிய வயதிலிருந்தே தீண்டாமையை எதிர்த்தது மட்டுமன்றி எல்லா மாணவர்களையும் வீட்டுக்கழைத்து இலவசமாகக் கல்வியளித்து வருபவர்.இவர் மேடையிலேறிப் பிரசங்கம் செய்வதில்லை. ஆனால் வாழ்ந்து காட்டுவதன் மூலம் சமுதாயத்தைத் திருத்தலாம் எனும் அசைக்கமுடியாத நம்பிக்கையுடையவர். இவர் போன்றவர்கள் ஆயிரத்திலொருவரே இருக்கமுடியும்.' என்று கூறியிருப்பது முழுதும் உண்மை.

மல்லிகையில் மட்டுமன்றி அலை, திசை போன்ற சஞ்சிகைகளிலும் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் மொழி பெயர்ப்புத் துறையிலும் சிறப்புற்று விளங்கினார். உதாரணமாகத் தீவிர லங்கா சமாஜக்கட்சியின் செயலாளரான லெண்ஸ்லி குணவர்த்தனாவின் மைத்துநரும் இடதுசாரிப் போக்கினரும் ஆகிய W.M.Aவர்ணசூரிய, அவரிடம் பட்டப்பின் படிப்பு ஆசிரிய மாணவியாய் இருந்த செல்வி. குமாரசுவாமி, இராமநாதன் கல்லூரியில் வரலாற்று ஆசிரியையாக அமர்ந்த போது வேண்டிக் கொண்ட படி,'சிங்கள தமிழ் கலாசாரத் தொடர்பு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை மொழி பெயர்த்து 'ஈழகேசரி' வார இதழுக்கு அனுப்ப அது அவ்வாறமே பிரசுரமாகிப் பலரது பாராட்டையும் பெற்றதனை இங்கு குறிப்பிடலாம். மாணவர்களின் தேவைகருதி, எந்தவித சன்மானத்தையும் எதிர்பாராமல் அவரால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்புக்கள் எண்ணிலடங்காதவை. உதாரணமாக ஒரு மாணவருக்காக ஒரு மெய்யியல் புத்தகத்தை முழுமையாக மொழிபெயர்க்கத் தொடங்கினார். பின்னர் தேவையில்லை என்று மாணவர் கூறியமையால் அது 50 பக்கங்களுடன் நிறுத்தப்பட்டது. (அம்மொழிபெயர்ப்புப் பக்கங்களை வைத்து ஒரு கட்டுரை 2019 கார்த்திகையில் என்னால் வரையப்பட்டு கலைமுகம் சஞ்சிகைக்கு அனுப்பப்பட்டது. கொரோனாச் சூழலால் அது வெளிவரத் தாமதமாகின்றது.)

இவரைப் பற்றிய ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொண்ட போதிலும் அவர் பற்றிய தகவல்களை, மூளை அடுக்குகளில் அவர் வைத்திருந்த எண்ணற்ற தரவுகளை வெளிப்படுத்திவிடமுடியாது. அவை தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல ஊறிக்கொண்டிருப்பவை. 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்பதைக் கற்றறிந்தவர்கள் நாங்கள். அவரோ அதற்குச் செயல்வடிவம் கொடுத்தவர். தான் செய்த செயல்களுக்காக அவர் மாணவர்களிடம் எதையுமே எதிர்பார்த்து நிற்கவில்லை. தன்னை நாடிவரும் மாணவர்களிடத்தில் சினந்தோ, அவர்கள் கேட்பதற்கு மறுப்புச்சொல்லியோ, தன்னைப் பயன்படுத்த கிறார்கள் என்று புலம்பியதையோ நான் அவரோடு பழகிய 22 வருடங்களில் கேட்டதுமில்லைக் கண்டதுமில்லை. மாணவர்கள் கேட்பதற்கு மேலாகவே கொடுத்த பெருவிருட்சம் அவர். கடைசிவரை கொடுத்துக் கொண்டேயிருந்தார். அவரது ஆனந்தம் அதுவே. நலிந்து கிடக்கும் இக்கலங்களை வெறுமையாக்கிப் புத்துயிரால் அதை நிரப்பினார். தனது கரங்களின் அழிவற்ற தொடுகையால் எமது சின்ன இதயங்களை பேரானந்தத்தில் திளைக்கவைத்தார். எமது சின்னஞ்சிறிய கைகளில் தமது அருங்கொடைகளை தந்து எம் இதயத்தை தனது எல்லையற்ற வலைப்பின்னலில் கைதியாக்கிவிட்டார்.

பரந்து படர்ந்த  
என் பாடல் இறக்கையின் முனைகொண்டு  
என்றுமே அடைய விழைய முடியாத  
உன் பாதங்களைத் தொடுகிறேன்.  
-தாகூர்-

**நா.நவராஜ்**

## பாராட்டி வாழ்த்துகிறோம்



உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் முருகேஸ்வரன் தூயவன் 2020 க.பொ.த(சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் (**தமிழ்மொழியும் இலக்கியமும் A, சைவசமயம் B, ஆங்கிலம் B, விஞ்ஞானம் B, கணிதம் B, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் B, வரலாறு C, சித்திரம் C, வர்த்தகமும் கணக்கியலும் C (A 5B 3C)**) சித்தியடைந்து இல்லத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளார். அவர் எதிர்காலத்தில் கல்வியில் மேலும் சிறப்படைந்து உயர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**-காந்தி சிறுவர் இல்லச் சமூகம்-**

## உயிர் கொல்லி கொரோனாவிலிருந்து விடுதலை

கொரோனா என்ற விசப்பூச்சியினை இயற்கை வைத்திய முறையில் அழிக்க காந்திய பெரியார் தேவதாஸ்காந்தி அவர்கள் தரும் நற்செய்தி.

அன்பர்களே,

**கொஞ்சம் மிளகு, இஞ்சி, எலும்மிச்சம்பழச்சாறு ஆகிய மூன்றையும் தண்ணீரில் கலந்து அந்த தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிப்போம்.**

*கொரோனாவிலிருந்து விடுதலை பெறுவோம்.*

தகவல்:  
சோ.க.தம்பிப்பிள்ளை,நிர்வாக அறங்காவலர், மகாத்மா காந்தி ஆசிரமம்,  
பிருந்தாவனம், சிவபுரம்,பூநகரி வழி, அலைபேசி: 077 813 2314

**அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.**



அகில இலங்கை காந்தி சேவா சங்கம்  
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 117599  
இலங்கை வங்கி  
ஆஸ்பத்திரி வீதி,  
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை D8 உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக திரு. சோ. க. தம்பிப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள **தீபம் பதிப்பகத்தில்** 2021 ஆம் ஆண்டு அக்டோபர் **மாதம் 02 ஆம் திகதி** அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A, PGDE, Dip.in Community Development& Management, M.A(Gandhian Thought), M.Ed

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org